செ.வெ.எண்:174 நாள்:25.04.2018

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவிலில் திருக்குடமுழுக்கு திருக்கோவிலை சுற்றியுள்ள மதுபான கடைகளுக்கு விடுமுறை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ,ஆ.ப., அவர்கள் உத்தரவு.

------

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி டவுண் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவிலில் திருக்குடமுழுக்கு திருவிழா 27.04.2018 அன்று நடைபெற இருப்பதால் திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தால்(டாஸ்மாக்) நடத்தப்படும் திருக்கோவிலைச் சுற்றியுள்ள பின்வரும் மதுபான கடைகள் அவற்றுடன் இணைந்த மதுபானக் கூடங்கள் மூடப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண். | முகவரி |
|---|---|---|
| 1. | 10733 | 102ஏ, நயினார்குளம் ரோடு, தச்சநல்லூர். |
| 2. | 10735 | 3ஏ,சிவசக்திரோடு, தச்சநல்லூர். |
| 3. | 10734 | 157சி/4 மற்றும் 4/5, மதுரை ரோடு, தச்சநல்லூர். |
| 4. | 10730 | 52/2, ராஜா ரோடு, நயினார் காம்பிளக்ஸ், திருநெல்வேலி சந்திப்பு |
| 5. | 10725 | 116, சிந்துபூந்துரை சாலை தெரு, திருநெல்வேலி சந்திப்பு |
| 6. | 10728 | 68/4, மதுரை ரோடு, திருநெல்வேலி சந்திப்பு. |
| 7. | 10912 | 218, குறுக்குத்துரை ரோடு, திருநெல்வேலி டவுண். |

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் நிர்வாகம் நடத்தி வரும் மேற்கண்ட ஏழு மதுபானக்கடைகள் அவற்றுடன் இணைந்த மதுபான கூடங்கள் ஆகியவைகள் **27.04.2018** (வெள்ளிக்கிழமை) அன்று மூடப்பட்டு இருக்கும். மேற்படி உரிம தலத்தில் மதுபானங்கள் விற்பனை கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், மேற்படி நாளில் திருக்கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் சட்ட விரோதமாக எவ்விடத்திலும் மதுபானங்கள் விற்பனை மற்றும் மதுபானங்கள் கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டால் காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.